## காரைக்குடி நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்
## பிறப்பிப்பவர் : திரு.அ.வீரமுத்துக்குமார்.பி.டெக்.,

ந.க.எண்.4145/2022/சி2, நாள்.24.01.2024

**பொருள் :** பொதுப்பணிகள் – காரைக்குடி நகராட்சி – நகராட்சிப் பகுதிகளில் 25.01.2024 அன்று பகுதி சபா கூட்டம் நடத்துதல் வார்டு குழு செயலாளர் மற்றும் பகுதிக்குழு செயலாளர் நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது – திருத்திய உத்தரவு பிறப்பித்தல் – தொடர்பாக.

**பார்வை :**

1. அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022.
2. அரசாணை(நிலை) எண்.93, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.24470/2019/ MA2, நாள்.27.10.2022.
4. இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.4248/2022/சி1, நாள்.28.10.2022.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.24470/2019/எம்ஏ2, நாள்.23.01.2024

======

**ஆணை :**

பார்வையில் 1 முதல் 4 வரையிலான அரசாணை மற்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி, காரைக்குடி நகராட்சி பகுதியில் 36 வார்டுகளை நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு வார்டு குழு மற்றும் பகுதி சபா கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

பார்வை –5 இல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, 25.01.2024 வாக்காளர் தினத்தை முன்னிட்டு பகுதி சபா கூட்டம் உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, நடத்துவதற்கு கீழ்கண்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | நகராட்சி அலுவலர்களின் பெயர் மற்றும் பதவி | உதவியாளர்களின் பெயர் மற்றும் பதவி | வார்டு எண். |
|---|---|---|---|
| 1 | திரு.பா.சரவணக்குமார், நகரமைப்பு ஆய்வர் | எம்.பாலகிருஷ்ணன், மின்கம்பி உதவியாளர் | 1,2 |
| 2 | திரு.வே.ராமையன், துப்புரவு ஆய்வர் | திரு.டி.சங்கிலி, து.ப.மேற்பார்வையாளர் | 3,4 |
| 3 | திரு.வி.சண்முகவேலு, வருவாய் ஆய்வர் | திரு.அ.பால்பாண்டி, வருவாய் ஆய்வர் | 5,6 |
| 4 | திரு.க.நீலகண்டன், உதவியாளர் | திரு.குமரேசன், வருவாய் உதவியாளர் | 7,8 |
| 5 | திரு.அ.ஜோசப்தனராஜ், உதவியாளர் | திருமதி.பா.ஜானகி, இளநிலை உதவியாளர் | 9,10 |
| 6 | திரு.மா.பிரேம்குமார், வருவாய் ஆய்வர் | திரு.ப.திருமூர்த்தி வருவாய் உதவியாளர் | 11,12 |
| 7 | திரு.எம்.ஆனந்தவிசுவாசம், உதவியாளர் | திருமதி.ஐ.சசிகலா, வருவாய் உதவியாளர் | 13,14 |
| 8 | திருமதி.து.பவானி, | திருமதி.க.தேவிப்பிரியா, | 15,16 |

| | | | |
|---|---|---|---|
| | உதவி திட்ட அமைப்பாளர் | இளநிலை உதவியாளர் | |
| 9 | திரு.மணிவண்ணன், துப்புரவு ஆய்வர் | திரு.எல்.வெங்கடேசன், து.ப.மேற்பார்வையாளர் | 17,18 |
| 10 | திரு.எம்.மணிகண்டன், வரைவாளர் | திரு.கே.வல்லவன், மின்கம்பியாளர் | 19,20 |
| 11 | திரு.தி.வேலுசாமி, உதவியாளர் | திரு.ப.பாரத்குமார், பதிவறை எழுத்தர் | 21,22 |
| 12 | திருமதி.ரெ.யோகேஸ்வரி, இளநிலை உதவியாளர் | திரு.ஆர்.செந்தில்குமார், வருவாய் உதவியாளர் | 23,24 |
| 13 | திரு.பி.வெற்றிவேலன், மின்கம்பியாளர் | திரு.ச.சொக்கலிங்கம் வருவாய் உதவியாளர் | 25,26 |
| 14 | திரு.என்.லோகநாதன், துப்புரவு ஆய்வர் | திருமதி.கு.கோமதி, இளநிலை உதவியாளர் | 27,28 |
| 15 | திருமதி.தொ.முத்துமாரி, உதவியாளர் | திரு.ஜி.இராமநாதன், து.ப.மேற்பார்வையாளர் | 29,30 |
| 16 | திரு.மா.பாலசுப்பிரமணியன், உதவிபொறியாளர் | திரு.சு.இராமகிருஷ்ணன். மின்கம்பி உதவியாளர் | 31,32 |
| 17 | திரு.சி.தேவசத்யராஜன், மின்கண்காணிப்பாளர் | திரு.ஆர்.ரவிச்சந்திரன், மின்கம்பியாளர் | 33,34 |
| 18 | திருமதி.பா.லதா, இளநிலை உதவியாளர் | திருமதி.பாலகுருதேவி, து.ப.மேற்பார்வையாளர் | 35,36 |

மேற்கண்ட அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டில் வார்டு குழு செயலாளராகவும், பகுதி சபா செயலாளராகவும் பணிபுரிய உத்தரவிடப்படுகிறது. மேற்கண்ட பணிக்கு கீழ்கண்டவாறு கண்காணிப்பு அலுவலர்கள் உத்தரவிடப்படுகிறது. இப்பணிக்கு ஒவ்வொரு அலுவலர்களுக்கும் இரண்டு கொசு தடுப்பு பணியாளர்களை பணிக்கு அனுப்பி வைக்க துப்புரவு அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | கண்காணிப்பாளர் பெயர் மற்றும் பதவி |
|---|---|---|
| 1 | 1 முதல் 12 வரை | திரு.அ.இசக்கி, செயற்பொறியாளர் |
| 2 | 13 முதல் 24 வரை | திரு.ஆர்.சுருளிநாதன், துப்புரவு அலுவலர் |
| 3 | 25 முதல் 36 வரை | திரு.மு.முத்துச்செல்வம், வருவாய் அலுவலர் |

**வார்டு குழு பணிகள்**

- அந்தந்த வார்டு நகர்மன்ற உறுப்பினர் குழுவின் தலைவராக இருப்பார்
- ஒவ்வொரு வார்டும் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு அந்தந்த பகுதியில் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள நபர் நகர்மன்ற ஒப்புதலுடன் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவார்.
- வார்டு குழுவின் கூட்டம் 3 மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும்.
- வார்டு குழு தலைவர் முன்னிலையில் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.
- கூட்டத்தில் குறைந்தபட்ச கோரம் குழு தலைவர் மற்றும் 2 உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும்
- வார்டு குழு தலைவர் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாத நிலையில், நிர்வாக அலுவலர் கூட்டத்தினை நடத்திட வேண்டும்.

- வார்டுக்கு தேவையான திட்டங்கள் மற்றும் ஆலோசனைகள் நகர்மன்றத்திற்கு சமர்பிக்க வேண்டும்.
- வார்டில் தேவையான மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் ஆலோசனைகளை நகரமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.
- வார்டு குழு கூட்டம் நடைபெறும் நாள்,நேரம் மற்றும் இடம் குறித்த அறிவிப்பு அனுப்ப வேண்டும்.
- கூட்ட நடவடிக்கைகள் தயார் செய்து அதனை தலைவரிடம் ஒப்புதல் பெற வேண்டும்.
- வார்டுக்குள் நடைபெற்று வரும் திட்டப் பணிகள், அபிவிருத்தி பணிகள் மற்றும் பயனாளிகளின் விவரப்பட்டியலை வார்டு குழு கூட்டத்தில் தகவலுக்காக வைக்க வேண்டும்.
- நகராட்சி வரி மற்றும் வரியில்லா இனங்களை செலுத்தாத நபர்களின் விவரப்பட்டியலை வார்டு குழுவின் தகவலுக்காக வைக்க வேண்டும்.
- மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் கூட்ட நடவடிக்கைகள் குறித்து வார்டு குழு செயலாளர் தனித்தனியே அறிக்கை தயார் செய்து ஆணையரின் பார்வைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**பகுதி சபா பணிகள்**

- மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டம் நடைபெற வேண்டும். கூட்டத்திற்கான கோரம் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, பார்த்துக்கொள்ள வேண்டும்.
- பகுதி சபா கூட்டம் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்த அறிவிப்பு அனுப்ப வேண்டும்.
- கூட்ட நடவடிக்கைகள் தயார் செய்து அதனை குழு சபா தலைவரிடம் ஒப்புதல் பெற வேண்டும்.
- வார்டுக்குள் நடைபெற்று வரும் திட்டப் பணிகள், அபிவிருத்தி பணிகள் மற்றும் பயனாளிகளின் விவரப்பட்டியலை பகுதி சபா கூட்டத்தில் தகவலுக்காக வைக்க வேண்டும்.
- நகராட்சி வரி மற்றும் வரியில்லா இனங்களை செலுத்தாத நபர்களின் விவரப்பட்டியலை பகுதி சபாவின் தகவலுக்காக வைக்க வேண்டும்.

ஆணையாளர்,
காரைக்குடி நகராட்சி

24/1/2024

**பெறுநர்**
சம்பந்தப்பட்ட அலுவலர்கள், காரைக்குடி நகராட்சி
**நகல் பணிந்தனுப்பப்படுகிறது.**

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை
2. மாவட்ட ஆட்சியர், சிவகங்கை

**நகல்** : நகர்மன்றத்தலைவர் அவர்கள்